# முதல்வர் பிறந்த நாளில் எடுக்க வேண்டிய உறுதிமொழி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் செய்தி!

உயிர்ப் பிரச்சினையான மொழிப்போரையும் உரிமைப் பிரச்சினையாக தொகுதி மறுசீரமைப்பையும் தமிழ்நாடு எதிர்கொண்டுள்ள சூழலில் தமிழ்நாட்டு மக்கள் ஏற்க வேண்டிய உறுதிமொழி:

**உறுதிமொழி**

- **தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம்!**
- **தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம்!**
- **தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்!**

**இதுதான் ஒரே இலக்கு!**

## கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாள்!

# ஆளுநர் ஆர்.என்.ரவி வாழ்த்து!



### “மகிழ்வோடு தமிழ்நாட்டு மக்களுக்குச் சேவையாற்றிட வாழ்த்துகிறேன்!” எனப் பதிவு!

சென்னை. மார்ச்.2 -

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதில், “பூரண உடல் ஆரோக்கியத்துடனும் - மகிழ்வுடனும் தமிழ்நாட்டு மக்களுக்குச் சேவையாற்றிட தங்களை (முதல்வரை) வாழ்த்துகிறேன்!” என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

அன்புள்ள முதலமைச்சர் அவர்களுக்கு,

தாங்கள் இன்று தங்களுடைய 72வது பிறந்த நாளை கொண்டாடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தங்களுடைய தலைமையின் கீழ் தமிழ்நாட்டு மக்கள் எல்லா நலன்களையும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்துகிறேன்.

மேலும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் தாங்கள் பூரண உடல் ஆரோக்கியத்துடனும், சந்தோஷத்துடனும், தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை ஆற்றிடவும் இந்நன்நாளில் தங்களை வாழ்த்துகிறேன்.

இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில், ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சமூக நீதிக்கான சரித்திர நாயகர் –

# செயலின் மறுவடிவமாம் முதலமைச்சருக்கு தாய்க் கழகம் வாழ்த்து!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து செய்தி!



சென்னை, மார்ச் 2-

திராவிட மாடல் அரசின் தலைவராம், சமூக நீதிக்கான சரித்திர நாயகர் செயலின் மறுவடிவமாம் முதலமைச்சருக்குத் தாய்க் கழகம் வாழ்த்துகிறது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

“திராவிட மாடல்” அரசின் தலைவராம் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு (1.3.2025) பிறந்த நாளில், தாய்க் கழகத்தின் சார்பில் மனங்கனிந்த குளிர்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் நிர்வாகத் திறன் எத்தனை நேர்த்தியானது என்பதை, இவர் சென்னை மாநகர மேயராக இருந்தபோதே நாடே கண்டு வியந்திருக்கிறது. சென்னை மாநகரில் திசைதோறும் துலங்கும் மேம்பாலங்கள் எல்லாம் அவர் புகழ் பேசும்!

உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது ஜப்பான் வரை நேரில் சென்று, ஒகனேக்கல் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்திக் காட்டிய சிற்பி!

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை நடை முறைப்படுத்தி, தந்தை பெரியாரின் லட்சியத்தை வென்று காட்டிய லட்சிய வீரர்!

புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மகளிர் உரிமைத் தொகை (மாதம் 1000 ரூபாய்), மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம் (விடியல் பயணம்), நான் முதல்வன் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (இங்கிலாந்து அரசே பின்பற்றப் போவதாக அறிவித்துள்ளது), கலைஞர் வீடு வழங்கும் திட்டம் என்று கடந்த நான்கு ஆண்டுகளில் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் மக்கள் நலத் திட்டங்கள்மூலம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு முதல் நிலை மாநிலமாக ஒளிவீசுகிறது!

ஒன்றிய அரசின் பொருளாதாரத் தடை களுக்கிடையே நாளும் நாளும் சாதனைகள் என்பதெல்லாம் அசாதாரணமானவை!

நலப் பணிகள்மூலம் ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டி, ஏதோ ஒரு வகையில் பால் வார்க்கிறது - மக்கள் பலன் அடைந்து வரு கின்றனர். “இது நமது ஆட்சி” என்ற உரிமையோடு கொண்டாடும் மனப்பான்மை மக்களிடம் நிலவுகிறது.

சமூகநீதி, பெண்ணுரிமை, மாநில உரிமை, மொழி உரிமை, சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமத்துவம், பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு என்கிற திராவிட சித்தாந்தத்தில் வீறுநடை போடும் தமிழ்நாட்டை, இந்தியத் துணைக் கண்டமே திரும்பிப் பார்க்கும் வகையில் நல்லாட்சி நாயகராக மிளிர்கிறார் நமது ஒப்பற்ற முதலமைச்சர்!

“உறவுக்குக் கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்” என்பதில் கவனமாக, வலிமையாகக் காய் நகர்த்தி வருகிறார்.

பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், “தமிழ்நாடு மேற்கு அய்ரோப்பிய நாடுகளோடு போட்டியிடும் சூழல் உருவாகியுள்ளது” என்று கூறியதையும் இணைத்துப் பாராட்டுகிறோம்.

ஜனநாயகம், சமூகநீதி, மதச் சார்பின்மைக்கு விரோதமாக ஒவ்வொரு அடியையும் வேக வேகமாக எடுத்து வைக்கிற ஒன்றிய அரசை எதிர்த்து நிற்கும் திராணியும், வலிமையும் பொருந்திய தலைவராக இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல - இந்தியத் துணைக் கண்டத்திற்கே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் நமது ஒப்பற்ற முதலமைச்சரை தாய்க் கழகம் கொள்கைப் பாசத்தோடு, அன்போடு அரவணைத்து உச்சிமோந்து வாழ்த்துகிறது.

உடல்நலத்துடன் நீடு வாழ்ந்து, நாட்டுக்கு நற்றொண்டு ஆற்றிட வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி. |
| | மாலை 4.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 26-02-2025








